# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை), தருமபுரி

சுற்றறிக்கை எண்.53

ந.க.எண். 19678/91 (வளர்ச்சி)

நாள் : 15.07.2019

## சுற்றறிக்கை

பொருள் : நகைக்கடன் - தனிநபர்களுக்கு நகைக்கடன் வழங்குதல் - தனிநபர் நகை கடன் உச்ச வரம்பு உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது - நடைமுறைபடுத்த அறிவுறுத்துவது - தொடர்பாக.

பார்வை : பதிவாளர் அவர்களது சுற்றறிக்கை எண்.11/2019 (ந.க.43449/2019 மவகொ1), நாள். 11.07.2019.

---------

தனிநபர்களுக்கு வழங்கப்படும் நகை கடன் உச்சவரம்பு ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) என நடைமுறையில் உள்ளது.

கூட்டுறவு நிறுவனங்களின் கடன் நிலுவையை உயர்த்தும் வகையிலும், நகைக்கடன் பிணயம் (Secured) உள்ள எளிதில் வசூல் ஆகும் வாய்ப்பு உள்ள கடன் என்ற காரணத்தால், தனிநபர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் நகைகடன் உச்சவரம்பு தற்போது நடைமுறையில் உள்ள ரூ.10.00 இலட்சம் என்ற அளவில் இருந்து, பார்வையில் கண்டுள்ள பதிவாளர் அவர்களது சுற்றறிக்கையில் ரூ.20.00 இலட்சம் என உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, மத்திய வங்கி கிளைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் தனிநபர் நகைகடன் உச்சவரம்பு ரூ.20.00 இலட்சம் என உயர்த்தி நிர்ணயம் செய்யப்படுகிறது.

தற்போது உயர்த்தப்பட்டுள்ள தனிநபர் நகைகடன் உச்ச வரம்பையும், நகைக்கடனுக்கு தற்போது வசூலிக்கப்படும் குறைந்த வட்டி விகிதத்தையும் நன்கு விளம்பரப்படுத்தி, அதிக அளவில் நகைக்கடன் வழங்க அறிவுறுத்தப்படுகிறது. மேலும் நகைக்கடன் வழங்க ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிமுறைகளையும் தவறாது கடைபிடிக்க அறவுறுத்தப்படுகிறது.

இந்த சுற்றறிக்கையை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை மறுதபாலில் தலைமையகத்திற்கு அனுப்பிவைக்க அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்./-கி.ரேணுகா
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்.

பெறுதல்

1. தலைமையகம் மற்றும் அனைத்து கிளை மேலாளர்கள்.
2. அனைத்து தொ.வே.கூ. கடன் சங்கங்கள் மற்றும் இதர கூட்டுறவு சங்கங்கள்.
3. அனைத்து தலைமையக பிரிவு மேலாளர்கள்.
4. களமேலாளர் மற்றும் சரக மேற்பார்வையாளர்கள் - தொ.வே.கூ.கடன் சங்கம் மற்றும் இதர கூட்டுறவு சங்கங்களுக்கு சுற்றறிக்கையினை தொடர்புறுத்தும் பொருட்டு.
5. கணினி பிரிவு மேலாளர் தக்க நடவடிக்கைக்காக

நகல்

1. துணைப்பதிவாளர், தருமபுரி / கிருஷ்ணகிரி/ ஓசூர்
2. இணைப்பதிவாளர், தருமபுரி மண்டலம்/ கிருஷ்ணகிரி மண்டலம்.
3. இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது மேலாளர் மேசைக்கு.
4. கூட்டுறவு தணிக்கை துணை இயக்குநர், தலைமையகம்.

/உண்மை நகல்/

மேலாளர்(வளர்ச்சி)